



தொடர்க:
aaramviral.com
facebook.com / aaramviral
twitter.com / aaramviral1

RNI Regd.No. TNTAM / 2017 / 74328. KKI / 120 / 2019-2021

# ஆறாம் விரல்

மாதம் இருமுறை பத்திரிகை






Volume: 9 ✯ Issue: 08 ✯ September 01–15/2025 ✯ Price Rs.10/- ✯ 4 Pages மலர்: 9 ✯ இதழ்: 08 ✯ செப்டம்பர் 01–15/2025 ✯ விலை ரூ.10/- ✯ 4 பக்கம்

## தூத்துக்குடியிலிருந்து சென்ற கடல் உணவுகளை.. பாதியில் திருப்பி அனுப்பிய அமெரிக்கா! வரியால் நஷ்டம்



தூத்துக்குடி: 600 கண்டெய்னர்களில் சுமார் 500 டன் இறால், கணவாய் உள்ளிட்ட கடல் உணவுகள் தூத்துக்குடியிலிருந்து கண்டெய்னர் கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. ஆனால் வரி காரணமாக, அந்நாட்டு வர்த்தகர்கள் கடல் உணவு கப்பலை பாதி வழியில் திருப்பி அனுப்பியிருக்கின்றனர். இதனால் தமிழகத்தை சேர்ந்த கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

எங்கள் உத்தரவை மீறி இந்த கப்பல் அமெரிக்காவுக்கு வந்தால், உணவை நாங்கள் டெலிவரி எடுக்க மாட்டோம் என்று அந்நாட்டு வணிகர்கள் கூறியிருக்கின்றனர். இதனால் கப்பல் வேறு வழியின்றி பாதி வழியில் தூத்துக்குடிக்கு வந்துக்கொண்டிருக்கிறது.

இந்திய கடல் பகுதியில் கிடைக்கும் முதல் தர இறால்கள் வெளிநாடுகளுக்கு தொடர்ந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக அமெரிக்காவுக்கு தூத்துக்குடியிலிருந்து நிறைய கப்பல்கள் செல்கின்றன. கடல் உணவு பொருட்களை சாதாரண கண்டெய்னர்களில் ஏற்றி அனுப்பிவிட முடியாது. உணவு கெட்டுப் போய்விடும். எனவே, இதற்கென தனியாக ரீஃபர் கண்டெய்னர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு 40 அடி ரீஃபர் கண்டெய்னரை அமெரிக்காவுக்கு அனுப்ப சராசரியாக ரூ.8.81 லட்சம் செலவாகும்.

அப்படியெனில் மேலே குறிப்பிட்டதை போல 600 கண்டெய்னர்கள் எனில் குறைந்தபட்சம் ரூ.35 கோடி முதல் ரூ.50 கோடி வரை ஆகும். மார்க்ஸ், ஹபக்லாய்டு என இருபெறும் கப்பல் நிறுவனங்கள் தங்கள் கட்டணங்களை அடிக்கடி மாற்றியமைக்கின்றன. சர்வதேச அளவில் எரிபொருள் விலையில் ஏற்படும் மாற்றங்களை பொறுத்து இந்த கட்டணங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. எனவே மேற்சொன்ன கட்டணம் அடிப்படையானதுதான்.

இது தவிர அமெரிக்காவில் உள்ள மேற்கு கடற்கரையான லாஸ் ஏஞ்சல்ஸுக்கு சரக்கு போகிறதா? அல்லது கிழக்கு கடற்கரையான நியூயார்க்குக்கு போகிறதா என்பதை பொறுத்தும் கட்டணங்கள் மாறும். எப்படி பார்த்தாலும் தமிழக ஏற்றுமதியாளர்களுக்கு இந்த வரி மூலம் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

சிஸிமிஷிமிலி நிறுவனத்தின் அறிக்கையின்படி, அமெரிக்கா விதித்த அதிக வரியால், இந்தியாவின் இறால் ஏற்றுமதி இந்த நிதியாண்டில் 1518% வரை குறையக்கூடும். இதனால், கடந்த நான்கு ஆண்டுகளாக வளர்ச்சி காணாமல் இருந்த கடல் உணவுத்துறை, மேலும் 1820% வருவாய் இழப்பைச் சந்திக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரி காரணமாக, வியட்நாம், பங்களாதேஷ் மற்றும் ஈக்வடார் போன்ற நாடுகளில் இருந்து வரும் கடல் உணவுகள், இந்திய கடல் உணவுகளை விட மிகவும் மலிவானதாக மாறியிருக்கிறது. இந்த நாடுகள் அமெரிக்க கடல் உணவு துறையில், இந்தியாவின் இடத்தை கைப்பற்றியிருக்கின்றன.

கடல் உணவு ஏற்றுமதியை தாண்டி வேறு சில துறைகளிலும் இந்த வரியானது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாவட்டம் இந்த வரியால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. திருப்பூரிலிருந்து ஆடைகள் அமெரிக்காவுக்கு அனுப்ப முடியாமல் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

## அ.தி.மு.க.,வில் இணையும் முயற்சி தோல்வி

# முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் தவிப்பு

மதுரையில் வரும் 4ம் தேதி, அ.தி.மு.க., தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவின் மாநில மாநாடு நடக்கும்' என, அதன் ஒருங்கிணைப்பாளரான முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் அறிவித்திருந்தார். ஆனால், அந்த மாநாட்டை ஒத்தி வைப்பதாக நேற்று அவர் தெரிவித்ததால், அவரின் ஆதரவாளர்களும், அவரை நம்பியுள்ள அ.தி.மு.க., தொண்டர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர். அத்துடன், அ.தி.மு.க., வில் மீண்டும் இணையும் பன்னீர்செல்வத்தின் முயற்சி பலன் அளிக்காததாலும், அக்கட்சியின் பொதுச் செயலர் பழனிசாமியிடமே நேரடியாக சரணடைந்து, தங்களை இணைத்து கொள்ளும் முடிவுக்கு வந்திருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த சட்டசபை தேர்தல் தோல்விக்கு பின், அ.தி.மு.க., தலைமைக்கு ஏற்பட்ட போட்டியை தொடர்ந்து, பொதுக்குழுவை கூட்டி, கட்சியின் ஒருங்கிணைப்பாளராக இருந்த பன்னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவாளர்களை நீக்கியதுடன், இணை ஒருங்கிணைப்பாளராக இருந்த பழனிசாமி, கட்சியின் பொதுச் செயலரானார்.

இதையடுத்து, 'அ.தி.மு.க., தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு' என்ற பெயரில், தன் ஆதரவாளர்களுடன் தனித்து இயங்கி வருகிறார் பன்னீர்செல்வம். பிரிந்து கிடக்கும் அ.தி.மு.க.,வினர் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என குரல் எழுப்பி வரும் பன்னீர், அதற்காக சட்ட ரீதியில் அ.தி.மு.க., தலைமைக்கு நெருக்கடி கொடுத்தும் வருகிறார்.

ஆனால், அதை கண்டுகொள்ளாத பழனிசாமி, 'பன்னீர்செல்வம், தினகரன், சசிகலா உள்ளிட்டோரை எக்காரணம் கொண்டும், மீண்டும் அ.தி.மு.க.,வில் இணைக்க மாட்டோம்' என, தொடர்ந்து கூறி வருகிறார்.

கடந்த லோக்சபா தேர்தலுக்கு முன், பா.ஜ., கூட்டணியில் இருந்து அ.தி.மு.க., பிரிந்து சென்றது. இந்நிலையில், தன் ஆதரவாளர்களுடன் பா.ஜ., பக்கம் சென்றார் பன்னீர்செல்வம். ராமநாதபுரம் தொகுதியில், பா.ஜ., கூட்டணியில் பன்னீர்செல்வத்துக்கு 'சீட்' ஒதுக்கப்பட, பலாப்பழம் சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

இதனால், 'மீண்டும் அ.தி.மு.க.,வில் இணைய, அவருக்கு வாய்ப்பு கிடைக்கும்' என, அவரது ஆதரவாளர்கள் நம்பினர். ஆனால், பழனிசாமி தன் முடிவில் உறுதியாக இருந்தார்; அது மட்டுமின்றி, பா.ஜ.,வுடன் மீண்டும் கூட்டணி அமைத்து விட்டார்.

இதனால், பா.ஜ., கூட்டணியில் பன்னீர்செல்வத்தின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. அவர் குறித்து பா.ஜ., எந்த முடிவும் அறிவிக்காத நிலையில், 'அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலுக்கு முன், ஏதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டும்' என, பன்னீர்செல்வத்துக்கு அவரது ஆதரவாளர்கள் நெருக்கடி கொடுக்கத் துவங்கினர்.



இதையடுத்து, கடந்த ஜூலையில் சென்னையில் தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவின் மாவட்ட செயலர்கள் கூட்டத்தை பன்னீர் கூட்டினார். அப்போது எடுக்கப்பட்ட முடிவின்படி, தன் செல்வாக்கை காட்ட, அ.தி.மு.க., தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு சார்பில், வரும் 4ம் தேதி மதுரையில் மிகப்பெரிய மாநாடு நடைபெறும் என்று அறிவித்தார்.

இந்நிலையில், வரும் 4ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மாநாட்டை ஒத்தி வைப்பதாக பன்னீர்செல்வம் நேற்று அறிக்கை வெளியிட்டார். அவரின் அறிவிப்பு, ஆதரவாளர்களுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக, பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் சிலர் கூறியதாவது:

பன்னீரின் ஆதரவாளர்களாக நாங்கள் அடையாளப்படுத்தப்பட்டு விட்டதால், அவரோடு இணைந்தே கட்சியை ஒருங்கிணைக்கலாம் என்ற நம்பிக்கையில், அவர் பின்னால் தொடர்ந்தோம்.

ஆனால், எந்த நடவடிக்கையிலும் அவர் உறுதியாக இல்லை; அறிவிக்கப்பட்ட மாநாட்டையும், எவ்வித காரணமும் சொல்லாமல் ஒத்தி வைத்திருக்கிறார்.

ஒத்தி வைப்பதும், ரத்து செய்வதும் ஒன்று தான். இனி என்ன செய்யப் போகிறோம் என்ற தகவலும் இல்லை. எந்த முடிவையும் உறுதியாக எடுக்காமல் காலம் கடத்துவது, எங்களின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது.

அதனால், அ.தி.மு.க., வில் நேரடியாக இணைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. விரைவில் பழனிசாமியை சந்திக்கவும் தீர்மானித்து உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இந்தியாவுக்கு அடுத்த ஷாக்.. அமெரிக்கா போல் வரிபோடும் ஐரோப்பா நாடுகள்?



வாஷிங்டன்: அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அடவாடியாக வரிகளை விதித்து வருகிறார். இதில் நம் நாடும் தப்பவில்லை. நம் நாட்டுக்கு மொத்தம் 50 சதவீத வரிகளை டிரம்ப் விதித்துள்ளார்.

அமெரிக்கா உடனான வர்த்தக பற்றாக்குறைக்கு 25 சதவீதம், ரஷ்யாவுடன் கச்சா எண்ணெய் வாங்குவதை சுட்டிக்காட்டி 25 சதவீதம் என்று மொத்தம் 50 சதவீத வரியை போட்டுள்ளார்.

மேலும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று டிரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார். ஆனால் நம் நாடு கண்டுக்கொள்ளவில்லை. இந்நிலையில் தான் அமெரிக்காவை போல் நம் நாட்டின் மீது வரி போடும்படி ஐரோப்பிய நாடுகளை வலியுறுத்தி வருகிறார்.

உக்னைர் மீதான ரஷ்யாவின் போரை ஐரேப்பிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. அதுமட்டுமின்றி ரஷ்யாவை சமாளிக்க உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகள் நிதி உதவிகள் செய்து வருகின்றன.

இதனால் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை எப்படி சுட்டிக்காட்டி அமெரிக்கா வரி போட்டதோ? அதேபோல் ஐரோப்பிய நாடுகளும் இந்தியா மீது வரி விதிக்க வேண்டும் என்று டொனால்ட் டிரம்ப் சார்பில் ஐரோப்பிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல் ரஷ்யா மீது ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. அதை காரணம் காட்டி இந்தியா மீது 2ம் நிலை பொருளாதார தடைகளையும் விதிக்க வேண்டும் என்று வெள்ளை மாளிகை சார்பில் வலியுறத்தப்பட்டுள்ளது ஆனால் தற்போது வரை ஐரோப்பிய நாடுகள் இந்த விஷயத்தில் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

## சென்னையில் டீ பிரியர்களுக்கு அதிர்ச்சி! காபி இனி 20 ரூபாய்: விலை அதிரடியாக உயர்கிறது




சென்னை: சென்னையில் நாளை முதல் டீ, காஃபி விலை உயர்த்தப்படும் (Tea and coffee prices increase in Chennai) என்று டீக்கடை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. 3 ஆண்டுகளுக்கு பிறகு சென்னையில் டீ, காபி விலை உயர்த்தப்பட்டுள்ளது. டீ ரூ.15 ஆகவும், காபி ரூ.20 ஆகவும் விற்பனை செய்யப்படும் என்று டீக்கடை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் டீ, காபி விலை உயர்த்தப்படுவதாக டீக்கடை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. தற்போது ஒரு டீ 12 ஆகவும், காபி ரூ.15 ஆகவும் உள்ளது. இந்த நிலையில்தான் தற்போது டீயின் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த டீ விலை உயர்வு அமலுக்கு வரும் என்று டீக்கடை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. புதிய விலைப்பட்டியல் படி டீ ரூ.15, காபி 20, லெமன் டீ 15, பால், 15, ஸ்பெஷல் டீ ரூ. 20 ஆக விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, ராகிமால்ட் , சுக்கு காப்பியின் விலை ரூ 20 க்கும், ஹார்லிக்ஸ், பூஸ்ட் விலை ரூ.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் காலை மற்றும் மாலை வேளைகளில் டீக்கடைகளில் கூட்டம் அலைமோதும். ஐடி நிறுவனங்களில் பணியாற்றுவர்கள் முதல் சாதாரண கூலி வேலை செய்பவர்கள் வரை அனைத்து தரப்பினரும் விரும்பி அருந்தும் பானமாக டீ உள்ளது. பலருக்கும் டீ குடித்தால்தான் வேலையே ஓடும் என சொல்லும் அளவிற்கு டீ மக்களின் உணவு பழக்க வழக்கத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. இந்த நிலையில் தான், டீ மற்றும் காபி விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது டீ பிரியர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பார்சல் டீயின் விலையும் உயர்த்தப் பட்டுள்ளது. ஒரு கப் டீ மற்றும் பால் ரூ.45 ஆகவும், ஒரு கப் காபி ரூ.60 ஆகவும், ஸ்பெஷல் டீ கப் ரூ.60 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. டீத்தூள், பால் விலை உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்டும் விதமாக டீ விலை உயர்த்தப்பட்டு இருப்பதாகவும் டீக்கடை விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டீ, காபி விலை உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சி அளிப்பதாக டீ பிரியர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சென்னையை சேர்ந்த ஒருவர் கூறுகையில், "அலுவலக நேரத்தில் டீ பிரேக்கிற்காக கட்டாயம் இரண்டு வேளை செல்கிறோம். தற்போது டீ மற்றும் நொறுக்குத் தீனிகள் என சாப்பிட்டால் 50 ரூபாய் வரை ஆகும் நிலையில், தற்போது டீயின் விலை உயர்த்தப்பட்டிருப்பது எங்களைப் போன்றவர்களுக்கு அன்றாட செலவில் பெரிய அடியாக விழும்.

இதனால், டீ குடிப்பதையும் குறைத்துக் கொள்ளலாமா என யோசிக்கிறேன் என்று கூறினார். பாலின் விலை அவ்வளவாக உயராத நிலையிலும் தற்போது ஒரே அடியாக ஒரு டீயின் விலை ரூ.15 ஆகவும் ஸ்பெஷல் டீயின் விலை ரூ.20 ஆகவும் உயர்த்தியிருப்பது சாதாரண மக்களுக்கு பேரதிர்ச்சியாக இருக்கும் என்றும், எனவே டீக்கடைகளுக்கு வியாபாரம் குறையவே செய்யும் என்பதால் விலை உயர்வு குறித்து டீக்கடை விற்பனையாளர்கள் சங்கம் மறுபரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார். டீ, காபி விலை உயர்த்தப்படுவதாக அறிவிப்பு வெளியானதும் சமூக வலைத்தளங்களில் மீம்ஸ்களும் இதுதொடர்பாக அதிகம் பகிரப்பட்டு வருகின்றன.

## பொருளாதார தடைகளுக்கு எதிராக ஒருமித்த கருத்தில் உள்ளோம்; ரஷ்ய அதிபர் புடின் உறுதி



முக்கியமான உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஆதாரங்களை திரட்டுவதில் சீனாவும், ரஷ்யாவும் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றன. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள பிரிக்ஸ் அமைப்பின் திறனை வலுப்படுத்த இரு நாடுகளும் ஒற்றுமையாக இருக்கின்றன. பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் மற்றும் பிற உலக நாடுகளின் வளர்ச்சியை தடுக்கும் பாரபட்சமான சமூக பொருளாதார தடைகளுக்கு எதிராக சீனாவும் எங்கள் நாடும் ஒருமித்த கருத்தில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அவரிடம், "இரு நாடுகளுக்கு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக, இருதரப்பு உறவு மேலும் ஆழமடையும். மீன் வளம், கடல்சார் அறிவியல் ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் மாலத்தீவுடன் பணியாற்ற சீனா தயாராக உள்ளது," என்றார்.

## மறு அறிவிப்பு வரும் வரை.. அமெரிக்காவுக்கான அனைத்து வகை அஞ்சல் சேவைகளும் நிறுத்தம்!




டெல்லி: இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்பை தொடர்ந்து, அந்நாட்டுக்கான அனைத்து வகை அஞ்சல் சேவைகளும் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப் படுவதாக மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.

இந்திய பொருட்கள் மீது தற்போது 50% அளவுக்கு சீனா வரியை போட்டிருக்கிறது. இந்த வரி காரணமாக இந்திய பொருட்கள் ஏற்றுமதியாகாமல் தேக்கம் அடைந்திருக்கின்றன. எனவே அமெரிக்காவுக்கான அஞ்சல் சேவையை ஆக.29ம் தேதி முதல் நிறுத்துவதாக மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

ஆனால், 100 டாலருக்கும் அதிக மதிப்பு கொண்ட பார்சல்கள் வழக்கம்போல ஏற்றுமதியாகும் என்று சொல்லப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது அனைத்து அஞ்சல் சேவைகளும் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கு அஞ்சல் எடுத்துச் செல்வதில் வரி விதிப்பு முறைகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் எனவே 100 டாலர் மதிப்புக்கொண்ட பார்சல் உட்பட அனைத்து வகையான அஞ்சல் சேவையும் நிறுத்தப்பட்டிருக்கிறது என இந்திய தபால் துறை தெரிவித்திருக்கிறது.

ஏற்கெனவே முன்பதிவு செய்தவர்கள் கூட அனுப்ப முடியாத சூழல் உருவாகியிருக்கிறது. இதற்கான முன்பதிவு கட்டணம் திருப்பி அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னதாக அமெரிக்க அரசு 'டி மினிஸ்' என்கிற ஒப்பந்தத்தை செயல்படுத்தி வந்தது. இந்த ஒப்பந்தம் அமலில் இருந்த போது, ரூ.70,500 மதிப்புக்கு குறைவாக உள்ள பார்சல் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஒப்பந்தம் முடிவடைந்திருப்பதால் பல நாடுகளும் தங்கள் பார்சல் சேவையை நிறுத்திருக்கின்றன.

ஆறாம் விரல்
மாதம் இருமுறை பத்திரிக்கை
செப்டம்பர்: 01- 15/2025

# தமிழ்நாடு தேர்தலில் விஜய் தலைமையில் கூட்டணி... டிடிவி தினகரன் சொன்ன பாயிண்டு.. ரொம்ப முக்கியம்




சென்னை: தமிழ்நாட்டில் அடுத்தாண்டு தான் தேர்தல் என்றாலும் இப்போதே அரசியல் களம் சூடுபிடித்துவிட்டது. தேர்தலை மனதில் வைத்து கூட்டணி நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் எடுத்து வருகின்றன. இதற்கிடையே தமிழ்நாடு தேர்தலில் விஜய் தலைமையில் நிச்சயம் ஒரு அணி போட்டியிடும் என்று டிடிவி தினகரன் கூறியிருக்கிறார். அவரது இந்தப் பேச்சு கவனிக்க வைப்பதாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் அடுத்தாண்டு தான் நடைபெறுகிறது. ஆனால், இப்போதே மாநிலத்தில் அரசியல் களம் சூடுபிடித்துவிட்டது. ஒரு பக்கம் எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டன.. இன்னொரு பக்கம் தேர்தலை மனதில் வைத்து கூட்டணியை உருவாக்கும் நடவடிக்கைகளும் தொடர்ந்து நடந்து வருகிறது.

அதில் திமுக கூட்டணிக்கு எதிராக ஒரு வலிமையான கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் அதிமுக இறங்கியுள்ளது. இதன் காரணமாகவே தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்பே அதிமுக பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்டது. இந்தக் கூட்டணியில் வேறு கட்சிகளையும் உள்ளே அழைத்து வரும் முயற்சிகளும் தொடர்ந்து நடந்து வருகிறது.

அதேநேரம் அதிமுகவில் இருந்து விலக்கப்பட்ட ஓபிஎஸ், டிடிவி தினகரன் ஆகியோர் முன்பு பாஜக கூட்டணியில் இருந்தனர். இப்போது அதிமுக கூட்டணி உருவாகியுள்ளதால் அவர்கள் கூட்டணியில் தொடர்வார்களா.. இல்லை தமிழக அரசியல் களத்தில் மாற்றம் ஏற்படுமா என்று பல கேள்விகள் எழுந்துள்ளன. இதற்கிடையே இது தொடர்பான கேள்விக்கு அமமுக தலைவர் டிடிவி தினகரன் சில முக்கிய பதில்களைக் கூறியிருக்கிறார்.

பரமக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய டிடிவி தினகரன், பாஜகவின் என்டிஏ கூட்டணியில் அமமுக இருக்கிறதா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு டிடிவி தினகரன், "நீங்க என்ன நினைக்கிறீங்க" என்று சிரித்துக் கொண்டே கேட்டு செய்தியாளர்களுக்கே அதிர்ச்சி கொடுத்தார். மேலும், இந்தக் கேள்வியை பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனிடம் கேட்குமாறும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இந்தக் கேள்வியை நீங்கள் நயினார் நாகேந்திரனிடம் தான் கேட்க வேண்டும். 2024 லோக்சபா தேர்தலில் மோடி தான் மீண்டும் பிரதமராக வர வேண்டும். அதுவே நாட்டின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் நல்லது என்பதை வலியுறுத்தி பாஜகவுக்கு நிபந்தனை இல்லாத ஆதரவை அளித்தோம். எனவே, இன்று கூட்டணி குறித்த கேள்விக்கு நயினார் நாகேந்திரன் பதிலளித்தால் சரியாக இருக்கும்.

என்னைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் அடுத்தாண்டு நடக்கும் சட்டசபைத் தேர்தலில் 4 அணிகள் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது. ஆளும் திமுக தலைமையிலான ஒரு அணி, எதிர்க்கட்சியான அதிமுக தலைமையில் ஓர் அணி.. சீமான் எப்போதும் தனித்துப் போட்டியிடுவதாகச் சொல்லி வருகிறார். அதேபோல விஜய் தலைமையிலும் ஒரு அணி உருவாகும். இப்படி நான்கு முனைப் போட்டி இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

ஓபிஎஸ் தரப்பு ஏற்கனவே பாஜக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்துவிட்டது. சசிகலா இன்னும் மவுனமாகவே இருக்கிறார். இதனால் அவர் என்ன செய்யப் போகிறார் என்பது குறித்துத் தெளிவான தகவல்கள் இல்லை. இந்தச் சூழலில் டிடிவி தினகரன் கூறியிருக்கும் இந்தத் தகவல்கள் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதேநேரம் தேர்தலுக்கு இன்னும் பல மாதங்கள் இருப்பதால் அதற்கு என்ன மாற்றம் வேண்டுமானாலும் நடக்கலாம் என்றே பலரும் கூறுகிறார்கள்.

# எடப்பாடி பழனிசாமி முதுகில் குத்திவிட்டார்".. தேமுதிக கூட்டத்தில் பிரேமலதா விஜயகாந்த் பேசியதாக தகவல்




சென்னை: எடப்பாடி பழனிசாமி முதுகில் குத்திவிட்டார் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், இன்று நடைபெற்ற கட்சி கூட்டத்தில் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை தியாகராய நகரில் தேமுதிக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை வகித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய பிரேமலதா, எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்துப் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலத்தில் கூட ராஜ்யசபா எம்.பி பதவி தொடர்பான கூட்டணி ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிட்டு கையெழுத்திடுவதில்லை என எடப்பாடி பழனிசாமி சொன்னார். அதேபோலதான் தேமுதிக உடன் கூட்டணி ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிடாமல் கையெழுத்திட்டார். ஆனால், ராஜ்யசபா எம்.பி சீட் தொடர்பான ஒப்பந்தத்தில் தெளிவாகப் பேசி விட்டுத்தான் கையெழுத்திட்டோம். முன்னாள் முதலமைச்சர் என்ற மாண்பின் காரணமாகத்தான் நாம் அந்த ஆதாரங்களை வெளியிடவில்லை.

அதனால்தான் நாம் ஏமாந்துவிட்டோம். பதவி கொடுப்பார்கள் என நம்பி இருந்தோம். பெரிய மனிதர் என நம்பி நம்பி ஏமாந்தது போதும், இனியும் நாம் நம்பத் தயாராக இல்லை. எடப்பாடி பழனிசாமி முதுகில் குத்திவிட்டார் என நிர்வாகிகள் மத்தியில் பிரேமலதா விஜயகாந்த் விமர்சித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்துக்கு எப்படி கூட்டம் கூடுகிறது என்பது உலகத்திற்கே தெரியும். எடப்பாடி பழனிசாமி பிரச்சார கூட்டத்திற்கு பணம், குடிப்பதற்கு மது ஆகியவற்றைக் கொடுத்து ஆள் கூட்டி வருகின்றனர். நமது கூட்டத்திற்கு கேப்டன் மீதுள்ள அன்பால் மக்கள் திரண்டு வருகின்றனர், இடத்தைச் சொன்னால் போதும் மக்கள் தானாக வந்து குவிகின்றனர் என்றும் பிரேமலதா விஜயகாந்த் பேசி இருப்பதாக கூறப்படுகிறது.

அதோடு, வரும் தேர்தலில் தேமுதிகவை தேடி அனைவரும் வருவார்கள் என்றும், வரக்கூடிய தேர்தலுக்கு முன்பாக எத்தனை இடம் என்பதை எழுதிக் கொடுத்த பிறகு தான் கூட்டணி பேச்சுவார்த்தையே நடக்கும் என பிரேமலதா விஜயகாந்த் கடுமையாகப் பேசியுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் 6 மாநிலங்களவை எம்.பி இடங்களுக்கான தேர்தல் கடந்த ஜூன் 19 ஆம் தேதி நடைபெற்றது. அதிமுகவிடம் இருந்து எப்படியாவது ஒரு மாநிலங்களவை எம்.பி இடத்தைப் பெற தேமுதிக முயற்சித்தது. கடந்த லோக்சபா தேர்தலின்போது செய்த ஒப்பந்தப்படி தங்களுக்கு ஒரு ராஜ்யசபா இடம் ஒதுக்க வேண்டியது அதிமுகவின் கடமை என பிரேமலதா விஜயகாந்த் கூறி இருந்தார்.

ஆனால், தேமுதிகவுக்கு ராஜ்யசபா சீட் தருவதாக சொல்லவே இல்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். இது தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை தேமுதிக பொருளாளர் சுதீஷ் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பில், தற்போதைய தேர்தலில் தேமுதிகவுக்கு எம்.பி சீட் இல்லை, அடுத்த தேர்தலில் வழங்குகிறோம் என எடப்பாடி பழனிசாமி கூறி விட்டார்.

அதையடுத்து, 2026 தேர்தலில் தேமுதிகவுக்கு மாநிலங்களவை சீட் தரப்படும் என அதிமுக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. மேலும், அதிமுக சார்பில் 2 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். இதனால் தேமுதிக தரப்பு அப்செட்டில் இருந்தது. இந்தச் சூழலில் தான் கட்சி கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமியை பிரேமலதா விஜயகாந்த் கடுமையாக விமர்சித்ததாக கூறப்படுகிறது.



ஃபயர்பீ டெக்னோ சர்வீசஸ் பிரைவேட். லிமிடெட், திருமதி பிரியாபாலன் அவர்களால் நிறுவப்பட்டு வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மதுரையில் அதன் புதிய அலுவலகத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்தது. ஃபயர்பீ டெக்னோ சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாக ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

மென்பொருள் மேம்பாட்டில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், திருமதி பிரியாபாலன் மிஜி துறையில் வளர்ந்து வரும் பெயராக Firebee Techno Services ஐ நிறுவியுள்ளார். புதிய அலுவலகம், எண். 14, ராம் சஞ்சீவ் பிளாசா, எதிரில் அமைந்துள்ளது. லக்ஷ்மணா மருத்துவமனை, மதுரை 625004, நிறுவனத்தின் விரிவாக்க செயல்பாடுகள் மற்றும் குழுவிற்கு ஆதரவளிக்கும். Firebee Techno Services ஆனது பிளாக் செயின் மேம்பாடு, இணையம் மற்றும் மொபைல் பயன்பாடுகள், கிளவுட் தீர்வுகள் மற்றும் மிஜி ஆலோசனைகளை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள 150+ நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

# 1000 கோடி சொத்து..மாதம் 25 லட்சம்! ராமதாஸின் 2வது மனைவி சுசீலாவின் டிமாண்ட்? கொதிக்குது தைலாபுரம்



சென்னை: பாட்டாளி மக்கள் கட்சியில் ராமதாஸ் அன்புமணி ராமதாஸ் இடையேயான மோதல் ஒருபுறம் பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில், மறுபுறம் ராமதாஸின் இரண்டாவது மனைவி என சொல்லப்படும் சுசீலா குறித்த விவகாரங்கள் மேலும் பரபரப்பை அதிகப்படுத்தி இருக்கின்றன. இந்த நிலையில் சொத்து விவகாரம் தான் இவ்வளவு பிரச்சனைக்கும் காரணம் என்கின்றனர் தைலாபுரம் வட்டாரத்தினர்.

கடந்த சில மாதங்களாகவே உட்கட்சி மோதலில் சிக்கித் தவிக்கிறது பாட்டாளி மக்கள் கட்சி. கட்சியின் நிறுவனரான ராமதாஸ் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை அதாவது 2023க்கு முன்பு வரை கட்சியில் குடும்பத்தினர் அல்லாதவர்களுக்கு தான் பாமக தலைவர் பதவியை கொடுத்து வந்தார்.

அந்த வகையில் ஜிகே மணி தலைவராக இருந்த நிலையில் கட்சியின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இளைஞர் அணி தலைவராக இருந்த தனது மகன் அன்புமணி ராமதாஸைத் தலைவர் ஆக்கினார். தொடர்ந்து ராமதாஸ் அன்புமணி ராமதாஸ் இடையே உறவு சுமூகமாகச் சென்று கொண்டிருந்த நிலையில் மக்களவைத் தேர்தலின் போது பிரச்சனை வெடித்தது.

சௌமியா அன்புமணியைத் தருமபுரியில் போட்டியிடக் கூடாது என ராமதாஸ் வலியுறுத்தியும் அவர் போட்டியிட்டதாகச் சொல்லப்படுகிறது. மிகக் குறைந்த அளவிலான வாக்கு வித்தியாசத்தில் தான் சௌமியா அன்புமணி தோல்வி அடைந்தார். இந்த நிலையில் அடுத்தடுத்து வன்னியர் சங்கம், பாமக நிகழ்வுகள் நடைபெற்ற நிலையில் ராமதாஸ் அன்புமணி இடையேயான மோதல் வெளிச்சத்திற்கு வர ஆரம்பித்தது. உச்சபட்சமாக வன்னியர் சங்க மாநாட்டுக்கு முன்னதாக அன்புமணியைத் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதாக அறிவித்ததோடு அவரைச் செயல் தலைவராகவும் ஆக்கினார் ராமதாஸ்.

தொடர்ந்து அன்புமணியின் ஆதரவாளர்களும் கட்சியில் இருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டனர். இப்படியாக பரபரப்பான நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருக்க அன்புமணி பொதுக்குழுவைக் கூட்டி நான் தான் தலைவர், அடுத்த ஆண்டு வரை பதவியில் தொடர்வேன் எனத் தீர்மானம் நிறைவேற்றினார். அதற்குப் போட்டியாக ராமதாஸ் தரப்பும் பொதுக்குழுவைக் கூட்டியது. விவகாரம் இவ்வாறு சென்று கொண்டிருக்க கடந்த ஜூன் மாதம் தனது மனைவி சரஸ்வதியுடன் திருமண நாளைக் கொண்டாடினார் ராமதாஸ்.

அது தொடர்பான புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வாழ்த்துகள் குவிந்தன. இதற்கிடையே அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக கடந்த வாரம் ராமதாஸ் தனது இரண்டாவது மனைவி எனச் சொல்லப்படும் சுசீலாவுடன் ஐம்பதாவது திருமண நாளைக் கொண்டாடியதாகப் புகைப்படங்கள் வெளியாகின. சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் சுசீலாவின் குடும்பத்தினர் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தன்னிடம் செவிலியராகப் பணியாற்றியவரையே ராமதாஸ் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

இதனால் ராமதாஸ் மீது விமர்சனங்களும் எழுந்தன. இந்த நிலையில் அந்தப் புகைப்படங்களை வெளியிட்டது சுசீலா தரப்பினர் என்கின்றனர் தைலாபுரம் வட்டாரத்தினர். இது தொடர்பாக நம்மிடம் பேசிய அவர்கள்," சிறுவயதில் இருந்து ராமதாசுடன் தான் சுசீலா இருக்கிறார். பழுத்த அரசியல்வாதி உடனான பயணம் அவருக்கு அரசியலையும் கற்றுத் தந்தது. சில விவகாரங்களில் ராமதாசுக்கு ஆலோசனையும் சொல்லி வந்தவர் தான் சுசீலா. இந்த நிலையில் கட்சியில் அன்புமணியின் ஆதிக்கம் அதிகமாவதால் தன்னால் தைலாபுரத்தில் நிரந்தரமாக இருக்க முடியாது என்பதுதான் சுசீலாவின் எண்ணம்.

காடுவெட்டி குரு போல தன்னையும் ஆக்கி விடுவார்களோ? என்ற எண்ணத்தில் தான் கட்சியின் கட்டுப்பாட்டை முழுக்க முழுக்க தன் பக்கம் கொண்டுவர ராமதாஸைப் பயன்படுத்திக் கொண்டார். அதற்கு ஜிகே மணி உள்ளிட்ட நிர்வாகிகள் உடந்தை எனச் சொல்லப்படுகிறது. ராமதாஸ் ஆதரவு எனச் சொல்லிக் கொண்டாலும் அவர்களை இயக்கியது என்னவோ சுசிலாதான். மேலும் சென்னை மாதவரத்தில் பிரபல பள்ளி ஒன்று இருக்கிறது. அதன் மதிப்பு இன்று ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும். பராமரிப்புத் தொகையாக சுசிலா குறிப்பிட்ட தொகையைப் பெற்று வருகிறார். இந்த நிலையில் நிரந்தரமாக அந்தப் பள்ளியைத் தன் பெயருக்கு மாற்றவும், 25 லட்சம் ரூபாய் பராமரிப்புத் தொகையாக வேண்டும் என்பதே சுசிலாவின் கோரிக்கை.

அதற்கு ராமதாஸ் குடும்பம் ஒப்புக் கொள்ளாததால் தான் ராமதாசுடன் திருமண நிகழ்வு புகைப்படங்களை எடுத்து அதனை வெளியிட்டு இருக்கிறார் சுசிலா" எனக் கூறி அதிர வைக்கின்றனர் தைலாபுரம் தரப்பினர். அதே நேரத்தில் புகைப்படங்கள் வெளியானது ராமதாஸுக்குத் தெரியாது எனவும், தற்போது குடும்பத்தினர் மூலம் அதனைத் தெரிந்து கொண்ட அவர் கடும் கோபத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேலும் இந்த விவகாரம் ஏற்கனவே தெரிந்தது தான் என்றாலும் புகைப்படங்கள் வெளியானதால் ராமதாஸின் குடும்பத்தினர் கடும் கொந்தளிப்பில் இருப்பதாகச் சொல்கின்றனர் நம்மிடம் பேசிய தைலாபுரம் தரப்பினர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் அரச்சலூர் பேரூராட்சியில் ஒன்றாவது வார்டு பொதுமக்களுக்கு பணிகளை செய்து தரக் கோரி30.06.2025 அன்று ஒன்றாவது வார்டு கவுன்சிலரும்,அரச்சலூர்பேரூராட்சி துணைத்தலைவருமான துளசிமணி சக்திவேல் உள்ளிருப்புப் போராட்டம் இருந்த பொழுது பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் 15.08.2025 தேதிக்குள் ஒன்றாவது வார்டுக்கு பணிகளை பூர்த்தி செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார். அதன் அடிப்படையில் உள்ளிருப்பு போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாக ஒன்றாவது வார்டு வீரப்பம் பாளையம் பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்காக பூமி பூஜை போடப்பட்டது. அரச்சலூர் பேரூராட்சி செயல் அலுவலர் சாஜன் மேத்யூ தலைமையில் அரச்சலூர் பேரூராட்சி துணைத் தலைவரும், ஒன்றாவது வார்டு கவுன்சிலரும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளருமான துளசி மணி சக்திவேல் வீரப்பம் பாளையம் ஊர் பொதுமக்களுடன் பூஜையில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



திருப்பூர் மாவட்டம் அவினாசி வட்டம் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் குமரன் திருப்பூரிலிருந்து கோவை செல்லும் தனியார் வாகனங்கள் அவிநாசி புதிய மற்றும் பழைய பஸ் ஸ்டாண்டுகள் வராமல் சென்ற வாகனத்துக்கு அபதாரம் விதித்தார்

# விநாயகர் சதுர்த்தி அணிவகுப்பு நிகழ்வு திருப்பூரில் சுமார் 100க்கும் மேற்பட்ட காவல் துறையினர் கலந்து கொண்டு கொடிய அணிவகுப்பு நிகழ்வு நடைபெற்றது...




விநாயகர் சதுர்த்தி திருவிழா 27/ 8 /2025 முதல் 31 /8 /2025 வரை நாடு முழுவதும் கொண்டாப்படுள்ளது. அது சமயம் விநாயகர் சிலைகள் ஊர்வலம் பகுதியாக நடைபெறவுள்ள நிலையில் பல்லடம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகள், தாராபுரம் காவல் நிலை எல்லைக்குட்பட்ட பகுதியில் யாதவ் கிரிஷ் அசோக் திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில், ராஜேந்திரன் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர், சுரேஷ் பல்லடம் காவல்துறை துணை கண்காணிப்பாளர், சுரேஷ்குமார் தாராபுரம் காவல்துறை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள் காவல் உதவி ஆய்வாளர்கள் தாலுகா காவலர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் படை காவலர்கள், திருப்பூர் ஆயுதப்படை காவலர்கள், ஊர் காவல் படையினர் சுமார் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு காவல்துறையினர் கொடி அணிவிப்பு நடைபெற்றது.

# தேனியில் ஒரே நிமிடத்தில் 20 லட்சம் லாபம்.. வங்கி ஊழியரின் சாமர்த்தியம்..




தேனி மாவட்டம் மேல்மங்கலம் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கருப்பசாமி என்பவர் பணியாற்றி வருகிறார். இவர் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே எல்.புதூரை சேர்ந்த ராஜன், மற்றும் கண்ணன் ஆகியோரிடம் அரசு வேலை வாங்கி தருவாத ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதனை நம்பி ரூ.20லு லட்சம் வரை தந்துள்ளார்கள். இந்த மோசடி தொடர்பாக வேளாண்மைத்துறை ஊழியரை போலீசார் கைது செய்தனர்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே எல்.புதூரை சேர்ந்த 42 வயதாகும் ராஜன் என்பவருடைய உறவினர் கண்ணன். கண்ணன் தேனி மாவட்டம் மேல்மங்கலம் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார். அவர் மூலமாக சின்னமனூர் அருகே கரிச்சிப்பட்டியை சேர்ந்த 47 வயதாகும் கருப்பசாமி என்பவர், வாடிப்பட்டி ராஜனுக்கு அறிமுகம் ஆனார். கருப்பசாமி தேனி வேளாண்மைத்துறை அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில், கருப்பசாமி தனக்கு தெரிந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் மூலம் பலருக்கு அரசு வேலை வாங்கித் கொடுத்துள்ளதாக ஆசை வார்த்தை கூறினாராம். பணம் கொடுத்தால் தேனி கலெக்டர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறையில் அரசு வேலை வாங்கித் தருவதாக கண்ணன், ராஜன் ஆகியோரிடம் கூறினாராம். அவர் கூறிய ஆசை வார்த்தைகளை இருவரும் அப்படியே நம்பி விட்டனர். இதையடுத்து கண்ணன் தனது மகனுக்கும், ராஜன் தனது மகன் மற்றும் மகளுக்கும் அரசு வேலை பெற முயற்சி செய்தனர். இதற்காக அவர்கள் சேர்ந்து மொத்தம் ரூ.13 லட்சத்தை கருப்பசாமியிடம் கொடுத்துள்ளார்கள்.

இதுகுறித்து வாடிப்பட்டி ராஜன் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் செய்தார். இந்த புகாரின் பேரில், மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் மாயாராஜலட்சுமி தலைமையில் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையை தொடர்ந்து 2 பெண்கள் உள்பட 4 பேரிடம் அரசு வேலை வாங்கித் தருவதாக ரூ.20 லட்சத்து 50 ஆயிரம் மோசடி செய்தது தொடர்பாக கருப்பசாமி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கருப்பசாமியை போலீசார் நேற்று கைது செய்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அரசு வேலை வாங்கித்தருவதாக யாராவது பணம் கேட்டால் தர வேண்டாம் என்றும், இதுபோன்ற மோசடி நபர்கள் குறித்து காவல்துறையில் புகார் அளித்தால், அவர்கள் மீது போலீசார் உடனே நடவடிக்கை எடுப்பார்கள். அரசு வேலைக்காக பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்று போலீசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



சீனா சென்ற பிரதமர் மோடிக்கு சிவப்புகம்பள வரவேற்பும், ஆடல் பாடல் உள்ளிட்ட இந்திய கலாசார கலைநிகழ்ச்சியும் பலரை கவர்ந்தன.

# கோயில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன தவறு–உச்சநீதிமன்றம் கேள்வி





சென்னை: மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தியதற்கு எதிராக ரமேஷ் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கின் விசாரணை இன்று நடைபெற்ற நிலையில், கோயில் நிதியை கல்விக்காகப் பயன்படுத்தினால் என்ன தவறு என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. கோயில் நிதியை கல்விக்கு பயன்படுத்துவதற்கு எதிராக தொடர்ந்த மனுவையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் சார்பில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் கோவில் நிலத்தில் கல்லூரி கட்டடம் கட்டுவதற்கான அறிவிப்பாணை வெளியிடப்பட்டிருந்தது. கோயில் நிலத்தில் கல்லூரி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து டி.ஆர். ரமேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். கல்லூரி கட்டடம் அமைப்பதற்கான அந்த அறிவிப்பாணையை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், இந்து சமய அறநியைத் துறை ஆணையரின் அறிவிப்பாணையை ரத்து செய்ய மறுத்தது. இதைத்தொடர்ந்து, கல்லூரி கட்டுவதற்கான முதல்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டன. இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து ரமேஷ் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்று நடைபெற்றது. நீதிபதி விக்ரம் தலைமையிலான நீதிபதிகள் வழக்கை விசாரித்தனர். அப்போது, நீதிபதிகள் இந்த வழக்கைத் தடுப்பதற்கு உங்களுக்கு என்ன முகாந்திரம் உள்ளது என்று கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளத்துப் பேசிய ரமேஷ், தற்போது கல்லூரி கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடமானது கொளத்தூர் சோம்நாத் ஆலயத்தின் இடமாகும்.

மேலும், கோயில் நிதியை கல்லூரிக்காக பயன்படுத்துகின்றனர். எனவே, கல்லூரி கட்டடம் கட்டும் அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இந்து சமய அறநிலையத்துறை தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம், சோம்நாத் ஆலயத்தின் இடத்தில் கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், அந்த இடத்திற்கான வாடகையாக 3 லட்சத்து 19 ஆயிரம் ரூபாயை இந்து சமய அறநிலையத் துறையானது கோயிலுக்கு வழங்கி வருகிறது.

சம்மந்தப்பட்ட இடத்தை வாடகை இல்லாமல் இலவசமாக பயன்படுத்தவில்லை. கபாலீஸ்வரர் திருக்கோயிலின் சார்பில் தான் கல்லூரி அமைக்கப்பட உள்ளது. கல்விக்காகத்தான் இந்த இடத்தை பயன்படுத்துகிறோம் என்றார். அதற்கு நீதிபதிகள், மாணவர்களின் எதிர்காலத்துக்காக கல்லூரிக்கான கட்டமைப்பை தான் இந்து சமய அறநிலையத் துறை ஏற்படுத்துகிறது.

கல்விக்காகத்தான் கோயில் நிதியைப் பயன்படுத்துகிறார்கள். எனவே, கல்விக்காக கட்டடம் அமைப்பதோ அல்லது நிதியை பயன்படுத்துவதிலோ என்ன தவறு இருக்கிறது என்று கேள்வி எழுப்பினர். மேலும், தமிழ்நாட்டில் கபாலீஸ்வரர் கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று கூறி தமிழக அரசுக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மதுரை திருமங்கலத்தில் B G நாயுடு ஸ்வீட்ஸ் 11 வது கிளை திறப்பு விழா



மதுரை மாவட்டம் திருமங்கலம் பஸ் ஸ்டாண்டு எதிரில் ஙி.நி. நாயுடு ஸ்வீட்ஸ் ஸ்டால் ஷோரும் தமிழகம் முழுவதும் 42 கிளைகளை தொடங்கி ஸ்வீட்ஸ், உயர்தர இனிப்பு வகைகளில் தனி முத்திரை பதித்து அதிக வாடிக்கையாளர்களின் நல் ஆதரவோடு விற்பனை செய்து வருகின்றனர். மதுரையில் கீழவெளி வீதி, வில்லாபுரம், டவுன் ஹால் ரோடு திருநகர், புதூர், அண்ணா பேருந்து நிலையம், றி .றி சாவடி, ஙிஙி குளம் போன்ற கிளைகளை கொண்ட கடைகள் இயங்கி வருகிறது தற்போது ஙி நி நாயுடு ஸ்வீட்ஸ் தனது 11 வது கிளையின் திறப்பு விழா திருமங்கலம் பகுதியில் நேற்று 27.08.2025 இனிதே ஆரம்பிக்கப்பட்டது இதில் கடையின் உரிமையாளர் பாலாஜி, குடும்பத்தினர், நண்பர்கள் உறவினர்கள் தொழிலதிபர்கள் வழக்கறி ஞர் முத்து கிருஷ்ணன் தி.மு.க தொண்டரணி காமாட்சி, மேலாளர் அருண்குமார். மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# மதுரை மாவட்டத்தில் விஜய்க்கு எதிராக கண்டன போஸ்டர்




மதுரை த வெக தலைவர் விஜய்க்கு எதிராக திமுக இளைஞர் அணியினர் ஒட்டி உள்ள கண்டன போஸ்டர்களால் மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது தவெக இரண்டாவது மாநில மாநாடு மதுரை அருகே பாரபத்தியில் கடந்த 21ஆம் தேதி நடைபெற்றது இதில் பேசிய விஜய் திமுகவையும் முதல்வரையும் கடுமையாக விமர்சனம் செய்தார் இதனை கண்டித்து திமுக தலைவர்கள் பலரும் அறிக்கை வெளியிட்டனர் திமுக சார்பில் சமூக வலைத்தளத்திலும் கண்டனங்களும்பதிவு செய்யப்பட்டு வருகின்றன இந்நிலையில் மதுரை தெற்கு புறநகர் திமுக இளைஞரணி சார்பில் இளைஞரணி அமைப்பாளர் விமல் தரப்பில் மதுரைநகர் மற்றும் புறநகர்மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் விஜய்க்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன இவற்றில் வாட் ப்ரோ ஓவர் ப்ரோ அசிங்கப்படுத்தாதீங்க ப்ரோ என்ற வாசகங்கள் வாயிலாக தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர் திமுக மட்டுமின்றி அதிமுக பாஜக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் விஜய்க்கு எதிராக கண்டன கருத்துக்களை பதிவு செய்து வரும் நிலையில் திமுக இளைஞர் அணியின் போஸ்டர்கள் மதுரையில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# பெண் வக்கீலின் அந்தரங்க வீடியோ! தமிழகத்தில் மீண்டும் மீண்டும் பரவுதே? நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் நறுக்



சென்னை: இணையத்தில் பரவிய பெண் வழக்கறிஞரின், அந்தரங்க வீடியோக்களை முடக்கம் செய்தாலும், தமிழகத்தில் மட்டும் எப்படி மீண்டும் மீண்டும் பரவி வருகிறது? என்று தமிழக சைபர் கிரைம் காவல்துறைக்கு சென்னை ஹைகோர்ட் கேள்வி எழுப்பியுள்ளது. அத்துடன், இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசு இடையிலான ஒத்துழைப்பை, நீதிமன்றம் எதிர்பார்க்கிறது என்றும் வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் கருத்து தெரிவித்துள்ளார்.

பெண் வழக்கறிஞர் ஒருவர், தன்னுடைய கல்லூரி காலகட்டத்தில், இளைஞர் ஒருவரை காதலித்து வந்துள்ளார்.. அப்போது அவருடன் நெருக்கமாகவும் இருந்துள்ளார்.. அந்த வீடியோக்கள், போட்டோக்கள் திடீரென வெப்சைட்களில் பரப்பப்பட்டன.. இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் வழக்கறிஞர், அந்த ஆபாச வீடியோக்களை நீக்க வேண்டும் என்று சென்னை ஹைகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

மேலும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியாவில் உள்ள 400 சட்ட விரோத இணைய தளங்களை முடக்கியது போல இந்த சட்ட விரோத இணையதளங்களையும் முடக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஹைகோர்ட், ஆபாச வீடியோக்களை நீக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டிருந்தது... 70 க்கும் மேற்பட்ட இணையதளங்களில் பகிரப்பட்டுள்ள அந்த காட்சிகளை 48 மணி நேரத்தில் நீக்க வேண்டும் என மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.. அத்துடன், வழிக்காட்டு நெறிமுறைகளை வகுக்கவும் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருந்தது..

இந்நிலையில், இந்த வழக்கானது நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு மீண்டும் தற்போது விசாரணைக்கு வந்துள்ளது.. அப்போது பாதிக்கப்பட்ட பெண் வழக்கறிஞர் தரப்பில் மூத்த வழக்கறிஞர் அபுடுகுமார் ராஜரத்தினம் ஆஜராகி வாதாடினார்.

அப்போது, இணையதளத்தில் வீடியோக்கள் முடக்கப்பட்ட போதிலும், தமிழகத்தில் 3 வெப்சைட்களில் அவை பரவி வருவதாகவும், புதிதாக ஒரு லிங்க் மூலமும் வீடியோக்கள் ஷேர் செய்யப்பட்டு வருவதாகவும் மொத்தம் நான்கு 'லிங்க்'களில் வீடியோ பரவி வருவதாகவும் வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "வீடியோக்களை நீக்க உத்தரவிட்ட நிலையில், மும்பை, டெல்லி போன்ற இடங்களில், இந்த வீடியோக்களை பார்க்க முடிவதில்லை. ஆனால், தமிழகத்தில் மட்டும் எப்படி மீண்டும் மீண்டும் வெப்சைட்களில் பரவி வருகிறது?

நல்ல பேச்சுகள் அடங்கிய வீடியோக்கள், இணையத்தில் இருந்து நீக்கப்படுகின்றன. ஆனால் மோசமான, ஆபாசமான வீடியோக்கள் மட்டும் வேக வேகமாக பரவி வருகிறது. இந்த வழக்கின் புலன் விசாரணை என்ன நிலையில் உள்ளது?" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு டிஜிபி தரப்பில் அரசு வழக்கறிஞர் வி.மேகநாதன், "வழக்கில் கைது செய்யப்பட்ட நபர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், இன்னொரு நபருக்கும் இதில் தொடர்பு உள்ளது என தெரியவந்துள்ளது. அவர்தான் வீடியோவை அப்லோடு செய்துள்ளார். ஆனால், அவரை அடையாளம் காண முடியவில்ல.. வழக்கில் புலன் விசாரணை முடிந்து, இறுதி அறிக்கை தயாராக உள்ளது. தடய அறிவியல் துறை அறிக்கைக்கு காத்திருக்கிறோம்,' என்றார்.

அப்போது, மத்திய அரசு தரப்பில் வழக்கறிஞர் ஏ.குமரகுரு ஆஜராகி, "மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அமைத்த குழு கூட்டம், செப்டம்பர் 2ம் தேதி நடக்க உள்ளது. அடுத்த விசாரணையின்போது, அறிக்கை தாக்கல் செய்ய, அவகாசம் அளிக்க வேண்டும். ஏற்கனவே வழங்கிய லிங்க்குகளில் பரவிய வீடியோக்கள் முடக்கப்பட்டிருக்கின்றன' என்றார்.

மேற்கண்ட வாதங்களை பதிவு செய்துகொண்ட நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், "இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசு இடையிலான ஒத்துழைப்பை, நீதிமன்றம் எதிர்பார்க்கிறது..

காரணம், இது பாதிக்கப்பட்டவரின் கண்ணியம் சம்பந்தப்பட்டுள்ளது. எனவே மீண்டும் மீண்டும் பரவி வரும், பெண் வழக்கறிஞரின் வீடியோக்கள் இடம்பெற்ற, 4 வெப்சைட் லிங்குகளையும் முடக்க வேண்டும்" என்று அதிரடியாக உத்தரவிட்டார்.. அத்துடன் இந்த வழக்கின் விசாரணையை வரும் செப்டம்பர் 11ம் தேதிக்கும் நீதிபதி தள்ளி வைத்தார்.

# திருச்செந்தூர் கோயிலில் சட்டவிரோத டிக்கெட் விற்பனை: குற்றவியல் நடவடிக்கை பாயும் நீதிமன்றம் உத்தரவு



மதுரை: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுவாமியை பக்தர்கள் தரிசனம் செய்ய சட்டவிரோதமாக டிக்கெட் விற்பனை செய்பவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது. மேலும், சட்டவிரோதமாக தரிசன டிக்கெட் விற்பனையைத் தடுக்க அறநிலையத்துறையும் காவல்துறையும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறுபடை வீடுகளில் ஒன்றானது திருச்செந்தூர் முருகன் கோயில். இக்கோயிலில் சுவாமி தரிசனத்துக்கு கோயிலில் சட்ட விரோதமாக டிக்கெட் விற்பனை நடைபெறுவதாகவும், அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கின் விசாரணை இன்று நடைபெற்றது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள், பக்தர்கள் கோயிலுக்கு மன நிம்மதியைத் தேடித்தான் வருகிறார்கள். அங்கும் சட்டவிரோத செயல்களை அனுமதிக்க முடியாது. திருச்செந்தூர் சுவாமி கோயிலில் சட்ட விரோத தரிசன டிக்கெட் விற்பனையை முற்றிலும் தடுக்க வேண்டும்.

முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களிடம், சட்டவிரோதமாக தரிசன டிக்கெட் விற்பனையைத் தடுக்க அறநிலையத் துறையும், காவல்துறையும் இணைந்து செயல்பட வேண்டும். சட்டவிரோதமாக டிக்கெட் விற்பனை செய்யும் நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள், அமைதியான முறையில் சாமி தரிசனம் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# வைகை ஆற்றில் மிதந்த 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மனுக்கள்.. பொதுமக்கள் அதிர்ச்சி!

மதுரை: உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் மிதந்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் முகாம்கள் நடத்தி மக்களிடம் மனுக்களை பெறும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் 10,000 இடங்களில் முகாம்கள் நடைபெற்று ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும், வழங்கப்பட்டு வருகிறது.

'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் மகளிர் உரிமைத் தொகை, பிறப்பு, இறப்பு சான்றிதழ், ஆவணங்களில் பெயர் திருத்தம், பட்டா, சிட்டா உள்ளிட்டவற்றுக்கான மனுக்களை மக்கள் அளித்து வருகின்றனர். இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு உரிய பயனாளிகள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும். எனவே பொதுமக்கள் முகாம்களில் மட்டுமே விண்ணப்பங்களை பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் மக்கள் வழங்கும் மனுக்கள் மீது அதிகபட்சம் 45 நாட்களில் தீர்வு காணப்படும் என அரசு அறிவித்திருக்கும் நிலையில், இதுவரை நடந்த முகாம்கள் மூலம், லட்சக்கணக்கான மனுக்கள்



பெறப்பட்டிருப்பதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் மிதந்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. முகாம்களில் வழங்கப்பட்ட மனுக்கள் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலர்களிடம் வழங்கப்பட்ட நிலையில் அந்த மனுக்கள் ஆற்றில் மிதந்தது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வைகை ஆற்றில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மிதப்பதைக் கண்டு பொதுமக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். ஆற்று நீரில் மிதந்து வந்த மனுக்களை சேகரித்த போலீசார் அதனை ஆற்றில் வீசியவர்கள் யார் என விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிவகங்கை அருகே கீழடி, கொந்தகை, நெல் முடிகரை, மடப்புரம் பகுதிகளில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் ஆற்றில் மிதந்து வந்ததாகவும், ஆற்றில் மிதக்கும் மனுக்களுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இந்த விவகாரத்தைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் சமூக வலைதளங்களில் திமுக அரசை விமர்சித்து வருகின்றனர்.

ஆறாம் விரல்
மாதம் இருமுறை பத்திரிக்கை
செப்டம்பர்: 01- 15/2025

## மதுரை ஆதீனத்துக்கு எதிராக இளைய ஆதீனம் திடீர் உண்ணாவிரத போராட்டம்.. சலசலப்பு!



மதுரை: தற்போதைய மதுரை ஆதீனத்திற்கு எதிராக, மறைந்த அருணகிரிநாதரின் நினைவிடத்தில் அமர்ந்து இளைய ஆதீனம் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார். அடுத்த ஆதீனத்தைத் தேர்வு செய்வதில் தன்னிச்சையாகச் செயல்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

மதுரை ஆதீனமாக இருந்த அருணகிரிநாதரின் மறைவுக்குப் பிறகு ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள், மதுரை ஆதீன மடத்தின் பொறுப்பு வந்தார். 293ஆவது மதுரை குருமகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹரர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் நியமனம் செய்யப்பட்டார்.

அண்மையில் மதுரை ஆதீனம் பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினார். தருமபுரம் ஆதீனம் ஏற்பாட்டில் சென்னை காட்டாங்கொளத்தூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கடந்த மே 2 ஆம் தேதி மதுரை ஆதீனம் காரில் வந்து கொண்டிருந்தார். அப்போது உளுந்தூர்பேட்டை சேலம் ரவுண்டானா பகுதியில் மதுரை ஆதீனத்தின் கார் மீது மற்றொரு கார் மோதி விட்டு நிற்காமல் சென்றதாக மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை திட்டமிட்டே கொலை செய்ய சதி நடந்துள்ளது என்றும், இதில் பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

மேலும், விபத்து ஏற்படுத்திய கார் தன்னை நீண்ட தூரம் தொடர்ந்து வந்தது என்றும், தன் கார் மீது மோதிய காரில் வந்தவர்கள் குல்லா அணிந்திருந்தனர் என்றும், முகத்தில் நீண்ட தாடி வைத்திருந்தனர் எனவும் கூறியிருந்தார். அவரது இந்தப் பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இது குறித்து விசாரணை செய்த கள்ளக்குறிச்சி போலீசார், சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், அதிவேகமாக காரை ஓட்டி சென்ற ஆதீனத்தின் கார் ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்து ஏற்பட காரணம் என தெரியவந்தது. இந்நிலையில் மதுரை ஆதீனத்தின் பேச்சு இரு மதத்தினருக்கு இடையே குழப்பத்தையும், மத மோதலையும் உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சைபர் கிரைம் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது.

இந்த புகாரின் அடிப்படையில், ஆதீனத்துக்கு எதிராக தவறான தகவலை பரப்புதல், கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் பேசுதல், சமூகத்துக்கு இடையே மோதலை உண்டாக்கும் வகையில் பேசுதல், பொது அமைதிக்கு கேடு விளைவிக்கும் வகையில் பேசுதல் ஆகிய 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் முன் ஜாமீன் பெற்றார் மதுரை ஆதீனம்.

இந்நிலையில், மதுரை ஆதீனத்திற்கு எதிராக, மறைந்த அருணகிரிநாதரின் நினைவிடத்தில் அமர்ந்து இளைய ஆதீனம் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார். அடுத்த ஆதீனத்தைத் தேர்வு செய்வதில் தன்னிச்சையாக மதுரை ஆதீனம் செயல்படுவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

## 150 சவரன் நகை பத்தலையாம்.. வரதட்சணை கேட்டு டார்ச்சர்.. மதுரையில் இளம்பெண் தற்கொலை! கொடூரம்

மதுரை: வரதட்சணை என்பது சட்டப்படி தவறு எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனாலும் கூட இன்னுமே வரதட்சணை கேட்டு பெண்ணை கொடுமைப்படுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. இதற்கிடையே மதுரையில் இளம்பெண் ஒருவர் வரதட்சணைக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட ஷாக் சம்பவம் அரங்கேறியுள்ளது.

இந்தியாவில் திருமணத்தின்போது வரதட்சணை வாங்குவது சட்டப்படி குற்றமாகும். ஆனால், இன்னுமே நமது நாட்டில் வரதட்சணைக் கொடுமை இருந்து கொண்டு தான் இருக்கிறது. பெண்ணின் பெண்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருப்பூரில் இதுபோல ஒரு மோசமான சம்பவம் நடந்தது.

ரிதன்யா என்ற பெண்ணிடம் வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்தியதில், அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டிருந்தார். அப்போதே மாநிலம் முழுக்க இந்தச் சம்பவம் பரபரப்பைக் கிளப்பியது. இதற்கிடையே மீண்டும் அப்படியொரு மோசமான சம்பவம் தான் மதுரையில் நடந்துள்ளது.

மதுரை மாவட்டம் செல்லூர் பகுதியில் வரதட்சணைக் கொடுமையால் இளம்பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக உறவினர்கள் புகாரளித்துள்ளனர். பெண்ணிடம் வரதட்சணையாக நகை கேட்டுக் கொடுமைப்படுத்தியதாகவும் இதனால் அந்தப் பெண் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகாரின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் ரூபன்ராஜ், மாமனார் இலங்கேஸ்வரன், மாமியார் தனபாக்கியம் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அதாவது பிரியதர்ஷினி என்ற பெண்ணுக்கும் ரூபன்ராஜுக்கும் கடந்தாண்டு திருமணம் நடந்துள்ளது. அப்போது மணமகன் வீட்டார் வரதட்சணையாக 300 சவரன் நகை கேட்டுள்ளனர். பெண் வீட்டார் திருமணத்தின் போது 150 சவரன் நகை போட்டதாகச் சொல்லப்படுகிறது.. ஆனாலும், 150 சவரன் தங்கம் மணமகன் குடும்பத்திற்கு போதவில்லையாம்.

மேலும் 150 சவரன் நகை கேட்டு மணமகன் வீட்டார் தொடர்ந்து தகராறு செய்து வந்துள்ளனர். இது தொடர்பாக இரு தரப்பிற்கும் இடையே திருமணம் நடந்து முடிந்து சில மாதங்களில்



கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் ரூபன்ராஜ் பிரியதர்ஷினி பிரிந்து வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்தச் சூழலில் தான் மனமுடைந்த பிரியதர்ஷினி அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற பிரியதர்ஷினி மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரை காப்பாற்ற மருத்துவர்கள் தீவிர முயற்சிகளை எடுத்தனர். இருப்பினும், அவரை காப்பாற்ற முடியவில்லை. அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். பிரியதர்ஷினி தற்கொலைக்கு மணமகன் வீட்டார் செய்த டார்ச்சர் தான் காரணம் என பிரியதர்ஷினி பெற்றோர் புகாரளித்துள்ளனர். இது தொடர்பாக அவரது கணவர் ரூபன் ராஜ், மாமனார் இலங்கேஸ்வரன், மாமியார் தனபாக்கியம் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தற்கொலை என்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு இல்லை.. தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் தோன்றினால் உடனடியாகச் சினேகா தற்கொலை தடுப்பு உதவி எண்: 044 2464000 (24 hours), மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104 (24 hours), ஐகால் (iCall Pychoso-cial) உதவி எண்e - 022-25521111 ( Mon-Sat, 8am-10pm) எண்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

## விநாயகர் சிலை ஊர்வலம்.. திருப்பூரில் மிகப்பெரிய அளவில் போக்குவரத்து மாற்றம்



திருப்பூர்: விநாயகர் சதுர்த்தியையொட்டி திருப்பூர் மாநகரில் 750க்கும் மேற்பட்ட சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்த சிலைகள் நீர்நிலைகளில் கரைப்பதற்காக நாளை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட உள்ளது. எனவே விநாயகர் சிலை ஊர்வலத்தையொட்டி திருப்பூரில் நாளை (சனிக்கிழமை) போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகர் பகுதியில் செய்யப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றம் பற்றி பார்ப்போம்.

திருப்பூர் மாநக போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் விடுத்துள்ள அறிவிப்பில் கூறியுள்ளதாவது: "விநாயகர் சிலைகள் ஊர்வலத்தையொட்டி நாளை காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரை அனைத்து கனரக சரக்கு வாகனங்களும் மாநகருக்குள் வர தடை செய்யப்பட்டுள்ளது. புதிய பஸ் நிலையத்துக்கு செல்லும் பஸ்கள் அனைத்தும் தேவைக்கேற்ப மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை பழைய வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக சந்திப்பு மற்றும் 60 அடி சாலையில் பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும். 60 அடி சாலை தற்காலிக பஸ் நிலையமாக செயல்படும். பெருமாநல்லூரிலிருந்து புதிய பஸ் நிலையத்துக்கு செல்லும் பஸ்கள் அனைத்தும் தேவைக்கேற்ப மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை போயம்பாளையத்தில் பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும். போயம்பாளையம் தற்காலிக பஸ்நிலையமாக செயல்படும்.

பழைய பஸ் நிலையத்திலிருந்து பெருமாநல்லூர் செல்லும் பஸ்கள் மற்றும் அனைத்து வாகனங்களும் தேவைக்கேற்ப அவினாசி சாலை வழியாக திருமுருகன்பூண்டி, பூலுவப்பட்டி நால்ரோடு வழியாக செல்லலாம்.

பெருமாநல்லூரிலிருந்து பழைய பஸ் நிலையத்திற்கு செல்லும் அனைத்து வாகனங்களும் பூலுவப்பட்டி, நெருப்பெரிச்சல், ஊத்துக்குளி நால்ரோடு வழியாக பழைய பஸ்நிலையம் சென்றடையலாம்.

அவினாசியிலிருந்து பழைய பஸ் நிலையத்திற்கு செல்லும் அனைத்து வாகனங்களும் திருமுருகன் பூண்டி, பூலுவப்பட்டி, நெருப்பெரிச்சல், ஊத்துக்குளி நால்ரோடு வழியாக பழைய பஸ் நிலையத்துக்கு செல்லலாம். பழைய பஸ் நிலையத்திலிருந்து அவினாசி மற்றும் புதிய பஸ் நிலையத்திற்கு செல்லும் வாகனங்கள் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை ராஜீவ்நகர் சிக்னல், செல்லாண்டி அம்மன்துறை, மின் மயானம், ஊத்துக்குளி ரோடு, தலைமை தபால் நிலையம், புஷ்பா சந்திப்பு, அவினாசி ரோடு வழியாக செல்லலாம்.

காங்கயம் ரோடு, நல்லூரிலிருந்து திருப்பூர் நோக்கி வரும் வாகனங்கள் அனைத்தும் முத்தனம்பாளையம் நால்ரோடு, கோவில்வழி, வீரபாண்டி பிரிவு, பல்லடம் ரோடு வழியாக மாற்றுப்பாதையில் செல்லலாம். பல்லடம் சாலையிலிருந்து தாராபுரம் செல்லும் வாகனங்கள் அனைத்தும் வீரபாண்டி பிரிவு, காளிகுமாரசாமி கோவில், பிள்ளையார் நகர், கோவில்வழி வழியாக மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை மாற்றுப்பாதையில் செல்லலாம்.

பல்லடம் சாலையிலிருந்து அவினாசி வழியாக செல்லும் வாகனங்கள் அனைத்தும் வீரபாண்டி பிரிவு, பலவஞ்சிபாளையம், கோவில்வழி, காங்கயம் ரோடு வழியாக நல்லூர், காசிபாளையம் சோதனை சாவடி, கூலிபாளையம், வீரபாண்டி பிரிவு வழியாக செல்லலாம்.

மங்கலம் சாலையிலிருந்து அவினாசி வழியாக செல்லும் வாகனங்கள் அணைப்பாளையம் பிரிவு, அணைப்பாளையம், சலவைப்பட்டறை, சிறுபூலுவபட்டி வழியாக அவினாசி செல்லலாம். தாராபுரம் சாலையிலிருந்து அவினாசி வழியாக செல்லும் வாகனங்கள் அனைத்தும் கோவில்வழி, அமராவதிபாளையம், காங்கயம் ரோடு வழியாக நல்லூர், காசிபாளையம் சோதனைசாவடி, கூலிபாளையம் நால்ரோடு, பூண்டி ரிங்ரோடு வழியாக செல்லலாம்" இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பிரதமரின் தாயை இழிவுபடுத்துவது தேசத்தை அவமதிக்கும் செயல்-வானதி சீனிவாசன் காட்டம்



கோவை: பிரதமரின் தாயாரை இழிவுபடுத்துவது தேசத்தை அவமதிக்கும் செயல். பிரதமரின் தாய் தேசத்திற்கே தாய் போன்றவர். அவரை கொச்சைப்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் கோஷம் போடுவதும், அதை ராகுல் காந்தியும், தேஜஸ்வி யாதவும் ரசிப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. காங்கிரஸின் வெறுப்பு அரசியலை நினைக்கும்போது வேதனைதான் ஏற்படுகிறது. காங்கிரஸின் அறுவெறுக்கத்தக்க வெறுப்பு அரசியலுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வாக்குகள் திருட்டு குற்றச்சாட்டை தெரிவித்தும், தேர்தல் ஆணையத்துக்கு எதிராக வாக்காளர் அதிகார யாத்திரை என்ற பேரணியில் பீகாரில் ராகுல் காந்தி பேரணியை தொடங்கியுள்ளார். இந்த யாத்திரையின் போது பிரதமர் நரேந்திர மோடியின் தாயான ஹீராபென் மோடியை சிலர் தவறாக பேசியதாக பாஜகவினர் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. அந்த வீடியோவில், யாத்திரையின் மேடையில் இருந்த சிலர் மோடியை தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது. அவர்கள் கூறியதை பொது மேடைகளில் திரும்ப கூறக் கூட முடியாது. அந்த அளவுக்கு அருவருக்கத்தக்க வகையில் பேசியுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இந்நிலையில், பிரதமரின் தாயாரை இழிவுபடுத்துவது தேசத்தை அவமதிக்கும் செயல். பிரதமரின் தாய் தேசத்திற்கே தாய் போன்றவர். அவரை கொச்சைப்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் கோஷம் போடுவதும், அதை ராகுல் காந்தியும், தேஜஸ்வி யாதவும் ரசிப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. காங்கிரஸின் வெறுப்பு அரசியலை நினைக்கும்போது வேதனைதான் ஏற்படுகிறது. காங்கிரஸின் அறுவெறுக்கத்தக்க வெறுப்பு அரசியலுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் கூறியுள்ளதாவது: பீகார் மாநிலத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மேற்கொண்டுள்ள யாத்திரையில், பிரதமர் நரேந்திர மோடியின் தாயாரை இழிவுபடுத்தி சிலர் கோஷமிட்டுள்ளனர். அதை கண்டிக்காமல் ராகுல் காந்தி, ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் ரசித்துள்ளனர்.

140 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்திய தேசத்தின் தலைமகன் பிரதமர் நரேந்திர மோடி. அவரது தாயார் 100 வயது வரை வாழ்ந்து மறைந்தவர். மகள் 12 ஆண்டுகள் குஜராத் முதலமைச்சராகவும், அதன் பிறகு பிரதமரான பிறகும், குஜராத்தில் உள்ள தனது வீட்டில் மிகமிக எளிமையாக வாழ்ந்தவர். எவ்வித அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாதவர்.

பிரதமரின் தாய் தேசத்திற்கே தாய் போன்றவர். அவரை கொச்சைப்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் கோஷம் போடுவதும், அதை ராகுல் காந்தியும், தேஜஸ்வி யாதவும் ரசிப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. காங்கிரஸின் வெறுப்பு அரசியலை நினைக்கும்போது வேதனைதான் ஏற்படுகிறது. பிரதமர் பதவியை தனது குடும்பச் சொத்தாக நினைத்துக் கொண்டிருந்த ராகுல் காந்தியின் கனவை தகர்த்தவர் பிரதமர் மோடி. அந்த விரக்தியில் பல்வேறு பொய்களை பரப்பி நாட்டில் வன்முறையை தூண்ட கலக யாத்திரையை ராகுல் காந்தி நடத்தி வருகிறார். அதில்தான் பிரதமரின் தாயாரை இழிவுபடுத்தியுள்ளனர். பிரதமரின் தாயாரை இழிவுபடுத்துவது தேசத்தை இழிவுப்படுத்தும் செயல். இதற்காக ராகுல் காந்தியும், தேஜஸ்வி யாதவும் நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். காங்கிரஸின் அறுவெறுக்கத்தக்க வெறுப்பு அரசியலை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தக்க பாடம் புகட்டுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## பல்லடம் இந்து முன்னானி சார்பில் விநாயகர் சதுர்த்தி திருவிழா-கோலாகலமாக நடைபெற்றது.



திருப்பூர் மாவட்டம் பல்லடம் நகரம் மற்றும் ஒன்றிய சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் நூற்றுக்கணக்கான விநாயகர் சிலைகள் இந்து முன்னணி மேற்கு மாவட்ட செயலாளர் சர்வேஸ்வரன் தலைமையில் மாநில செயலாளர் சண்முகம் மற்றும் இந்து முன்னணி நிர்வாகிகள் செந்தில் உள்ளிட்டோர் பங்கேற்ற என்.ஜி.ஆர் சாலையில் ஆரம்பித்து திருச்சி சாலை மேற்கு பல்லடம் அண்ணா நகர் வழியாக மாணிக்கபுரம் சாலை வழியாக மங்களம் சாலை வந்து பொங்கலூர் பிஏபி வாய்க்காலில் கறைப்பதற்கான ஊர்வலம் தற்போது நடைபெற்றது,ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்து ஊர்வலத்தில் கோலாகலமாக நடனங்களும் விதவித விநாயகர் ஊர்வலம் தற்போது திருவிழா போல பல்லடம் மாறி உள்ளது.இந்து முன்னணி நிர்வாகிகள் உதயகுமார், ரஞ்சித், லோகநாதன்,உள்ளிட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் பலரும் பங்கேற்று தற்போது நிகழ்ச்சி நடைபெற்றது. விநாயகர் சதுர்த்தி அன்று நிறுவப்பட்ட இந்து முன்னணி சார்பான விநாயகர் மூன்று நாட்கள் கழித்து தற்போது ஊர்வலத்துடன் கரைக்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## திருப்பூர் ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றி தர வேண்டி ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை மனு ஜனநாயக மக்கள் கழகம் சார்பில் அளிக்கப்பட்டது




ஜனநாயக மக்கள் கழகம் சார்பாக திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பொது மக்களுடைய அடிப்படை தேவைகள் நிறைவேற்றித் தரக்கோரி திருப்பூர் முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் பகுதியில் வாழும் 3000 குடும்பங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள் அடிப்படை தேவைகள் நிறைவேற்றி தர வேண்டி மனு கொடுக்கப்பட்டது ஆட்சித் தலைவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஜனநாயக மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் அசோக் கண்ணன் திருப்பூர் மாவட்ட தலைவர் ஆர் கண்ணன் திருப்பூர் மாவட்ட செயலாளர் கே வெங்கடாஜலம் திருப்பூர் மாவட்ட பொருளாளர் பி எஸ் குமரேசன் திருப்பூர் மாவட்ட தொழிற்சங்க தலைவர் ஒய் பிரகாஷ் திருப்பூர் மாவட்ட தொழிற்சங்க செயலாளர் குமார்

திருப்பூர் மாவட்ட கழக துணை செயலாளர் பெரியசாமி மற்றும் சேலம் மாவட்ட கழக செயலாளர் ஆர் அம்சவல்லி ஜனநாயக மக்கள் கழக தலைமை நிலைய செயலாளர் மணி மற்றும் அந்த பகுதியில் வாழும் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டு கோரிக்கமான கொடுக்கப்பட்டது.

## பல்லடம் இந்து முன்னானி சார்பில் விநாயகர் சதுர்த்தி திருவிழா கோலாகலமாக நடைபெற்றது




திருப்பூர் மாவட்டம் பல்லடம் நகரம் மற்றும் ஒன்றிய சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் நூற்றுக்கணக்கான விநாயகர் சிலைகள் இந்து முன்னணி மேற்கு மாவட்ட செயலாளர் சர்வேஸ்வரன் தலைமையில் மாநில செயலாளர் சண்முகம் மற்றும் இந்து முன்னணி நிர்வாகிகள் செந்தில் உள்ளிட்டோர் பங்கேற்ற என்.ஜி.ஆர் சாலையில் ஆரம்பித்து திருச்சி சாலை மேற்கு பல்லடம் அண்ணா நகர் வழியாக மாணிக்கபுரம் சாலை வழியாக மங்களம் சாலை வந்து பொங்கலூர் பிஏபி வாய்க்காலில் கறைப்பதற்கான ஊர்வலம் தற்போது நடைபெற்றது,ஏராளமான பொதுமக்கள் கண்டு ரசித்து ஊர்வலத்தில் கோலாகலமாக நடனங்களும் விதவித விநாயகர் ஊர்வலம் தற்போது திருவிழா போல பல்லடம் மாறி உள்ளது.இந்து முன்னணி நிர்வாகிகள் உதயகுமார், ரஞ்சித், லோகநாதன்,உள்ளிட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் பலரும் பங்கேற்று தற்போது நிகழ்ச்சி நடைபெற்றது. விநாயகர் சதுர்த்தி அன்று நிறுவப்பட்ட இந்து முன்னணி சார்பான விநாயகர் மூன்று நாட்கள் கழித்து தற்போது ஊர்வலத்துடன் கரைக்கப்படும் நிகழ்ச்சி நடைபெற்றது.

Print.ed by D. Christ EdwinRaj and PubJished by N. Ramachandran and Printed at CM Printers & Graphics, 86E·1 (No.385)J Joe Daniel Street, K.P. Road. Nagercoil~ and published from No.3C Sasthancoil Street. Vadiveeswaram, Nagercoil-2. Editor· N. Ramachandran. All Cases are under Nagercoil JudiciaL Contact: 8883788847